# ஆகஸ்ட் - 10 - வியாழன்

**புனித லோறன்ஸ்**

**அல்லேலூயா! ஆண்டவருக்கு அஞ்சிநடப்போர் பேறுபெற்றோர்: திபா. 112:1**

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 9 : 6 - 10

சகோதர சகோதரிகயே! குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார். நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார். இதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்கவேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர். கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்ப வல்லவர். எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்குத் தருவார் அனைத்து நற்செயல்களையும் செய்வதற்குத் தேவையான தெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்."ஒருவர் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கும்போது அவரது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்" என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா!விதைப்பவருக்கு விதையையும், உண்பதற்கு உணவையும் வழங்குபவர், விதைப்பதற்கு வேண்டிய விதைகளை வழங்கி அவை முளைத்து வளரச் செய்து அறச் செயல்களாகிய விளைச்சலை மிகுதியாகத் தருவார்.

**பதில்பாடல் :** மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர் நன்மை அடைவர்

## நற்செய்தி : யோவான் 12 : 24 - 26

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர். எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார் ' என்றார்.

**தியானம்:** ஆண்டவராகிய இயேசு நம் வாழ்வின் வழியாக, ஒளியாக உண்மையாக இருப்பதை ஒருநாளும் ஒருபொழுதும் மறக்கக் கூடாது. அவர் நம் வாழ்வையும் வாழ்வின் நிறைவையும் பெறுவதற்காக இந்த உலகத்திற்கு வந்தார். நம்மை வாழ வைப்பதற்காகவே உலகிற்கு வந்தார். இயேசு உலகத்திற்கு வந்த நோக்கமே நம் பாவங்களில் இருந்து மீட்கப்பட்டு அவருடைய பிள்ளைகளாக வாழும் படியாக (மத் 1:21 யோவா 10:10). இன்று அழகான நற்செய்தி கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது பலன் கொடுக்க முடியாது. அதன் அர்த்தம் என்ன? உலகத்தில் நாம் நம்மை இழக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். குடும்ப வாழ்வாக இருந்தாலும் துறவற வாழ்வாக இருந்தாலும் எந்த மனிதன் தன்னுடைய சுயத்தை இழக்க ஆயத்தமாக இருக்கிறானோ அவன் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போக மாட்டார், கெட்டுப் போனவர் விட்டுக்கொடுக்க மாட்டார். எந்த மனிதன் தன்னை ஆண்டவரில் இழக்கின்றானோ அந்த மனிதன் தான் இவ்வுலகில் உயிருள்ள சாட்சியாக மாறமுடியும். புனிதர்களுடைய வாழ்க்கையிலும் மறைசாட்சிகளுடைய வாழ்க்கையிலும் சரி ஏன் அவர்களை புனிதர்கள் மறைசாட்சிகள் என்று சொல்கின்றோம்? அவர்கள் தம்மை இழக்க ஆயத்தமாக இருந்தவர்கள். எந்த மனிதர் தன்னை இழப்பானோ ஆசீர்வாதத்தை பெறுவான், .எந்த மனிதன் தன்னை தாழ்துகின்றானோ உயர்த்தப்படுவான். அன்னை மரியா தன்னை தாழ்த்தினார் (லூக்1:38 ) உங்களை தாழ்த்திப் பாருங்கள்.